பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 20 | செவ்வாய்க்கிழமை | 07.11.2023 | கதிர் 360

# வடக்கில் முதலிட சீனர்கள் ஆர்வம்

## வடக்கு மக்கள் வரவேற்பர் எனவும் எதிர்பார்ப்பு
## யாழ்ப்பாணம் வந்த சீனத் தூதுவர் தெரிவிப்பு

**சீன தொழிற்துறையினர், முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிட ஆர்வமாக உள்ளனர். இலங்கையின் வடக்கு மக்களும் அதனை வரவேற்க தயாராகவுள்ளனர் என்று நம்புகிறேன்.**

**இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் சீனத் தூதுவர் கி ஸென் ஹொங்.**

**சீனாவில் இருந்து இலங்கைக்கு** ☞ 2



## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நடந்தபோது கட்சியின் தேசிய மாநாடு பற்றிய விடயத்திற்கு மேலதிகமாகப் பேசப்பட்ட ஒரேயொரு விடயம் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன் பதவிவிலகவேண்டும் என்பதுபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்துத்தான்.

மேற்படி மத்தியசெயற்குழு கூட்டத்தின்போது, வவுனியாவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர், இரா.சம்பந்தன் பதவி விலக வேண்டும் என்பது தொடர்பில் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள் குறித்து அவர் விளக்கவேண்டும் என்று கோரினார். தலைவர் அனுமதி வழங்கினால் அந்தக் கேள்விக்கான பதிலைத் தான் இங்கே விரிவாக வழங்குவார் என்ற பீடிகையுடன் தொடங்கினார் சுமந்திரன். மாவை.சோ.சேனாதிராசாவும் அதற்கான விளக்கத்தை வழங்கத்தானே வேண்டும் என்றார். இதனையடுத்து சுமந்திரன் நீண்ட விளக்கமொன்றை வழங்கியிருந்தார்.

அதற்கு முன்னதாக ஒரு காணொலியையும் அவர் அங்கு கூட்டத்தில் இருந்தவர்களுக்குக் காட்டினார். அது கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளைத் தலைவரான சட்டத் தரணி தவராசா நடத்திய செய்தியாளர் சந்திப்பின் ☞ 2

## லாஃப்ஸ் காஸ் விலை அதிகரிக்கப்படமாட்டாது

லாஃப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை அதிகரிக்காமல் அதேவிலையில் பேணுவதற்கு தீர்மானித்துள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

லாஃப்ஸ்நிறுவனத்தின்நிறைவேற்று குழு அதிகாரி கலாநிதி நிரோஷன் பீரிஸ் தெரிவித்ததாவது:

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிப்புடன் ஒப்பிடும் போது எரிவாயு விலை அதிகரிக்கப்பட வேண்டியிருந்தாலும், தற்போதைய விலைக்கே சமையல் எரிவாயுவை விற்பனை செய்வதற்குத் ☞ 2

## குடாநாட்டின் பல இடங்களுக்கும் சீனத் தூதரக குழுவினர் பயணம்

### ஆயர் இல்லத்தில் உலருணவு நிவாரணம் வழங்கினர்






யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நேற்று வருகை தந்த இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் தலைமையிலான குழுவினர் பல்வேறு இடங்களுக்கும் பயணம்செய்து பார்வையிட்டதுடன் சீன அரசின் உலர் உணவுப் பொதிகளையும் மக்களுக்கு வழங்கி வைத்தனர்.

இலங்கை மற்றும் சீனா பௌத்த நட்புறவு சங்கமும், சீனாவின் புத்த சங்கம் இணைந்து சீனாவில் உள்ள பௌத்த மக்களால் இலங்கையிலுள்ளவறிய மக்களுக்கெனவழங்கிய ☞ 8

## கண் பார்வை குறைவை தடுக்க மருத்துவர் மலரவன் அறிவுரை



கண் பார்வை குறைவு ஏற்படுவதை தடுப்பதற்கு மக்கள் சில நடைமுறைகளைபின்பற்ற வேண்டும் என கண் சிகிச்சை வைத்திய நிபுணர் மு.மலரவன் தெரிவித்துள்ளார். ☞ 8

## யாழ். நகர சபைக்கான புதிய கட்டடத்தினது முதற்கட்ட பணிகள் அடுத்தாண்டு நிறைவு

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு

புனரமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் யாழ். நகர மண்டபத்தின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் அடுத்த வருடம் நிறைவடையுமென நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் ☞ 2

## கிரிக்கெட்டின் பின்னடவை ஆராய அமைச்சரவை உப குழு நியமனம்

இலங்கை கிரிக்கட் துறை எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைகளுக்குத் தீர்வுகாண விசேட அமைச்சரவை உப குழுவொன்றைநியமிக்க நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த உப குழு வின் தலைவராக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மற்றும் அதன் உறுப்பினர்களாக மின்சக்திமற்றும்வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷநாணயக்காரஆகியோர்நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கிரிக்கெட்டில் நிலவும் பிரச்சினைகளை துரிதமாக தீர்ப்பதற்கான பரிந்துரைகளை செய்வதே இந்த உபகுழுவின் பொறுப்பாகும்.

முன்னாள் சிரேஷ்ட கிரிக்கெட் வீரர்களின் கருத்துக்களையும் பெற்றுக்கொண்டு தற்போதைய நிலைமையை ஆராய்வதற்கும், குறித்த தரப்பினருடன் இணக்கமாக செயற்படவும் அமைச்சரவை உப குழு நடவ ☞ 2

## அமெரிக்க நிதி கூட்டுத்தாபன தலைவர் கொழும்பு வருகை

அமெரிக்க சர்வதேச அபிவிருத்திநிதிக்கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நெதன் இலங்கைக்கு வருகைதந்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் இடம்பெறவுள்ள அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தின் முக்கிய உட்கட்டமைப்பு முதலீட்டுக்கான ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றுவதற்காகவே அவர் இலங்கைக்கு வந்துள்ளார்.

தெற்காசிய பிராந்தியத்திற்காக பிரஜைகள் அபிவிருத்தி வர்த்தக நிதியத்திற்கான அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் முதலீட்டு உறுதிப்பாட்டிற்கான ஒப்பந்த கைச்சாத்திலும் ஸ்கொட் நெதன் கலந்துகொள்ளவுள்ளார்.

இலங்கை வரும் ஸ்கொட் நெதன் நாட்டின் உயர்மட்ட வர்த்தக மற்றும் ☞ 8

## கல்வி அமைச்சுக்காக 2024இல் 237 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

### அடுத்தாண்டு முதல் தவணை பெப்ரவரியில் தொடங்கும்

2024ஆம்ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத்திட்டத்தில்கல்வி அமைச்சுக்காக 237 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கத் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும்தெரிவித்ததாவது:

’நாட்டில் ஏற்பட்ட பல்வேறு சிக்கல்கள் காரணமாக புதிய தவணைக்காகஇந்தவருடம், மார்ச் மாதம் பாடசாலைகளைகாலதாமதமாகவேஆரம்பிக்கவேண்டியிருந்தது. ஆனால் அந்தத் தாமதங்களைக் குறைத்து 2024ஆம் ஆண்டுபெப்ரவரிமாதம் முதல் புதிய தவணை ஆரம்பிக்கப்படும். ☞ 2

## தமிழர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் இலுப்பைக்குளத்தில் புத்தர் சிலைகள்

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் தமிழர்களுடைய பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியின் இலுப்பைக்குளம் பகுதியில்தமிழ்மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நிர்மாணிக்கப்பட்டுவந்த பொரலுகந்த ரஜமஹா விகாரைப்பகுதியில் நேற்றுக்காலை பௌத்த பிக்குகள்மற்றும்சிங்கள மக்களினால் இரண்டு புத்தர்சிலைகள்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் ஆரம்பத்தில் புத்த விகாரை கட்டுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் அதற்கு அப்பகுதி மக்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

அத்துடன் குறித்த விடயம் தொடர்பாக கிழக்கு ஆளுநரிடம் திருகோணமலை ☞ 2

## நுண்கடன் நிதி நிறுவன அதிகார சபை உருவாக்கப்படும் என்கிறார் அமைச்சர்

நுண்கடன் நிதி நிறுவனங்களின்முறையற்ற செயற்பாடுகளினால் சுமார் 30 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றைக் கண்காணிப்பதற்கு நுண்கடன் நிதிநிறுவனஅதிகாரசபை ஸ்தாபிக்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

மஹரகவில் நேற்று இடம்பெற்ற நிகழ் வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நுண்கடன்நிதிநிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம்பெற்றுள்ளபிரச்சினைகள் சர்வ தேச மட்டத்தில் பேசப்படுகின்றன. நுண்க டன்களை முன்னிலைப் படுத்திய தற்கொலைகள், முரண்பாடுகள் உள் ளிட்ட பல பிரச்சினைகள் சமூக கட்டமைப்பில் ☞ 2

## இனி இது .....

காணொலி. அதில் சம்பந்தர் இறக்கும் வரைக்கும் பதவியில் இருக்க ஆசைப்படுகிறார் என்பது உள்ளிட்ட பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அதனைக் காண்பித்த சுமந்திரன், இப்படி எமது கட்சியைச் சேர்ந்தவர்களே தலைவரைப் பற்றி அவதூறாகப் பேசிய போது இந்த செயற்குழு அது குறித்து எந்தவொரு கேள்வியையும் எழுப்பவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

அவர் வழங்கிய விளக்கம் வருமாறு:

2010 ஆம் ஆண்டுக்கு முன்னதாக என்னை அரசியலில் ஈடுமாறு இரண்டு தடவைகள் சம்பந்தனும், சேனாதிராசாவும் வலிந்து அழைத்தபோதும் அதனை நிராகரித்த நிலையில் மீண்டும் 2010 ஆம் ஆண்டு தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்புரிமையை வழங்கி அரசியலுக்கு அந்த இருவருமே அழைத்து வந்தனர். அதன் பின்னர் 2015 ஆம் ஆண்டு தேர்தல் அரசியலுக்கான களத்தையும் அவர்களே ஏற்படுத்தினார்கள்.

தொடர்ந்து சம்பந்தன், தேர்தல் அரசியலுக்கு விடைகொடுக்கும் தீர்மானத்தை எடுத்தார். அதேநேரம் சேனாதிராசாவும் வடக்கு முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடப்போவதாக அறிவித்தார். அச்சமயத்தில் 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 ஆம் திகதியன்று சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது, சம்பந்தன், சேனாதிராசாவின் முடிவுகளை மையப்படுத்தி என்னால் தொடர்சியாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாது. ஆகவே அரசியல் செயற்பாடுகளில் இருந்து வெளியேறுகின்றேன் என்ற முடிவை அறிவித்தேன். எனினும், சம்பந்தனும் சேனாதிராஜாவும் அதனை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. நீதான் இனி எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று கூறித்தான் என்னைத் தொடர்ந்தும் அரசியலில் இருக்கச் சம்மதிக்க வைத்தார்கள்.

அதன் பின்னர், திருகோணமலையில் சம்பந்தனின் முடிவை அறிக்கும் கூட்டமொன்று நடத்தப்பட்டது. அதன்போது சம்பந்தன் தனது முடிவை அறிவித்தபோதும், திருகோணமலை மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் சம்பந்தன் தனது முடிவை மீள் பரிசீலனை செய்தார். அதன்போது இரண்டு நிபந்தனைகளைவிதித்தார். அதில் முதலாவது, கட்சியின் முதலாவது தேசியப்பட்டியலை குகதாசனுக்கு வழங்குவதெனவும், இரண்டாவதாக தான் ஒருவருடத்துக்கே நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பேன் என்பதுமாகும். அதற்கு மேல் தன்னுடைய உடல்நிலை அதற்கு இடமளிக்காது என்றும் குறிப்பிட்டார். கட்சி அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதன் பின்னரே அவர் தேர்தலில் போட்டியிட முன்வந்தார்.

அதன்பின்னர், வவுனியாலில் 2022 நடைபெற்ற மத்தியசெயற்குழு கூட்டத்தில் திருகோணமலை விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டபோது சம்பந்தனின் நிபந்தனை சம்பந்தமான விடயம் பேசுபொருளாகியது. அச்சமயத்தில் மத்தியகுழு சம்பந்தனுடன் நேரில் குறித்த விடயம் சம்பந்தமாக பேசுவதெனத் தீர்மானித்தது. அதன்போது நானும், சேனாதிராஜாவும் நேரில் சென்று விடயங்களைப் பகிர்ந்தபோது, சம்பந்தன், மக்கள் தனது நிலைமைகளை அறிந்தே தன்னை தெரிவு செய்தனர் எனச் சுட்டிக்காட்டி பதவியிலிருந்து விலகும் தீர்மானத்தை மறுதலித்தார்.

இந்த நிலையில்தான் ஆங்கிலமொழியிலான தொலைக் காட்சி கலந்துரையாடலொன்றுக்கு நான் அழைக்கப்பட்டேன். அந்த கலந்துரையாடலானது, பிழையான இடங்களில் ஊழல்களை தேடுகின்றோமா என்ற தலைப்பில் நடைபெற்றது. அதன்போதுதான், தகவலறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் வினா தொடுக்கப்பட்டது. அந்த வினாவுக்கு பதிலளிக்கும் போது தான் நான் அவரின் பதவி விலகலைக் குறிப்பிட்டேன்.

அதுவொரு இக்கட்டான வினாவாகும். உண்மையில், நாடாளுமன்றத்துக்கு வெறுமனே 39 நாள்கள் வருகைதந்தமைக்காகவும், திருகோணமலையிலிருந்து வருகை தருவதாக போக்குவரத்து கட்டணங்கள் வழங்கப்படுகின்றமை தொடர்பிலும் கரிசனை கொள்ளப்பட்டிருந்தால் மக்கள் வரிப்பணம் தவறாக பயன்படுத்தப்படுகின்றது என்றே நான் ஒத்துக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் நான் அந்த விடயங்களைத் தவிர்த்து இராஜினாமா விடயத்தை வெளிப்படுத்தினேன். எனது தனிப்பட்ட நிலைப்பாட்டையும் குறிப்பிட்டேன்.

இந்த கருத்துக்களால் என்னை சாடுபவர்கள், விமர்சிப்பவர்கள் ஒருபுறம் இருக்கையில், என்னைப் பொறுத்தவரையில் சம்பந்தனின் நற்பெயரை நான் பாதுகாத்துள்ளேன். தற்போது வளர்த்தகடா மார்பில் பாய்கிறது என்று விமர்சிப்பவர்கள், தாமாக வலிந்து ஊடகவியலாளர் மாநாட்டை யாழில் கூட்டி சம்பந்தன் தனது அந்திம காலம் வரையில் பதவியில் இருக்க விரும்புகின்றார். அதனால்தான் கட்சி சீரழிகின்றது என்று பொதுவெளியில் கூறியுள்ளார்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுகின்றேன். - என்றார்.

இந்தநேரத்தில், இடைமறித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், குறித்த வினாவைதவிர்ப்பதற்கு உங்களுக்கு தெரிவொன்று இருக்கையில் நீங்கள் எதற்காக பதிலளிக்க முனைந்தீர்கள் என்று வினாவொன்றை எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன், குறித்த நிகழ்ச்சியை நீங்கள் ஆரம்பத்திலிருந்து பார்த்தீர்கள் என்றால் நான் தேசிய கட்சிகள் இரண்டின் ஊழல்கள் தொடர்பில் அதிகமான விமர்சனங்களை முன்வைத்திருந்தேன். அதன்போது என்னுடைய கட்சியைமையப்படுத்தி வினா தொடுக்கப்பட்டபோது அதற்கு பதிலளிக்காது விட்டால் கிட்டத்தட்ட குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதாகவே மாறிவிடும். அத்துடன், ஊழலுக்கு எதிரான எனது கருத்துக்கள் தொடர்பிலான நம்பகத்தன்மையும் கேள்விக்குள்ளாகும். எனவே தான் அதற்கு பதிலளிக்க வேண்டி ஏற்பட்டது.

அதேநேரம், தற்போதும் கூட, நான் சம்பந்தன் ஐயா என்னை அரசியலுக்கு அழைத்து வந்தவர், ஆதரவாகவழிகாட்டியாக இருந்தவர் என்பதை கூறும் அதேநேரம், அவருடைய நற்பெயரைப் பாதுகாப்பதாக இருந்தால் பதவியிலிருந்து விலகுவதோடு அவர் கொழும்பில் வசிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குச் சொந்தமான வீட்டை மீண்டும் கையளிக்க வேண்டும். அத்தோடு சம்பந்தன் பதவி விலகுவதானது, நாடாளுமன்ற மற்றும் தேசிய மட்டச் செயற்பாடுகளுக்கும், திருகோணமலை மாவட்டத்திற்கும் நன்மைகளையே அளிக்கும். மேலும் அவர் தமிழ் மக்களின் தலைவர் அந்தஸ்துடன் தொடர்ந்தும் நற்பெயருடன் இருப்பார் - என்றார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடலுணவுஇறக்குமதிசெய்யப்படாது. குறிப்பாக வடக்கு மாகாணத்திற்கு கடலுணவுஇறக்குமதிசெய்யப்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

சீன தூதுவர் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகை தந்தனர். வடக்குக்கான மூன்றநாள் பயணத்தி ஓரங்கமாக அவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். இதன்போது நெடுந்தீவு பிரதேச மக்களுக்காக 500 உலருணவுப் பொதிகளை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் கையளித்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் சீனர்கள் வடக்கில் முதலிட ஆர்வமாக இருக்கிறார்கள் என்று தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடியின்போது இலங்கையுடனான பொருளாதாரத்தை உயர்த்த முதலாவதாக சீனாவே கை கொடுத்தது. சீனா எதிர்காலத்திலும் கைகொடுக்கும். 15 மில்லியன் ரூபாய் பெறுமதியான உதவிகளை சீனா வழங்கவுள்ளது. 5 மில்லியன் உணவு பொருட்களாகவும் 5 மில்லியன் மீனவர்களுக்கான உதவிகளாகவும் 5 மில்லியன் வீட்டு திட்டத்திற்குமாக வழங்கப்படவுள்ளன.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கு வந்திருந்தபோது, இலங்கை கடலுணவுகளை சீனாவுக்கு ஏற்றுமதிசெய்வதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டது. சீனாவில் இருந்து இலங்கைக்கு கடலுணவுஇறக்குமதிசெய்யப்படாது. விசேடமாக வடக்கு மாகாணத்திற்கு கடலுணவுஇறக்குமதிசெய்யப்படாது.

சீனா உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார நாடு. அங்கு மிகப்பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது. உங்களை அதற்கே வரவேற்கிறோம் - என்றார்.

## லாஃப்ஸ் காஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்துள்ளோம்.

லாஃப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை கள் இறுதியாக கடந்த ஒக்டோபர் மாதம் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் தற்போது 12.5கிலோகிராமின் விலை 3,835 ரூபாவிலிருந்து 3,985ஆக 150 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டதோடு, 5கிலோகிராமின் விலை 1,535 ரூபாவிலிருந்து 1,595 ரூபாவாக 60 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது என்றார்.

## நுண்கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றன.

நுண்கடன்நிதிநிறுவனங்களின் முறையற்ற செயற்பாடுகளினால் சுமார் 30 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டில் 11 ஆயிரம் நுண்கடன்நிதிநிறுவனங்கள் இயங்குகின்ற நிலையில் அவற்றில் 05 நிறுவனங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவுசெய்ய பதிவுசெய்யப்படாத நிதிநிறுவனங்கள் தான் முறையற்ற வகையில் செயற்படுகின்றன. நிதி நிறுவனங்களை பதிவு செய்வதை கட்டாயப்படுத்தும் சட்டமூலம் எதிர்வரும் மாதமளவில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

பதிவு செய்யாத நிறுவனங்கள் 05 இலட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும். தண்டப்பணம் செலுத்த தவறும் பட்சத்தில் 5 வருடகால சிறைத்தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

நுண்கடன்நிதிநிறுவனங்களை கண்காணிக்கும் வகையில் நுண்கடன் கண்காணிப்பு அதிகார சபை அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் ஸ்தாபிக்கப்படும். இதனை தொடர்ந்து சகல நுண் கடன் நிதி நிறுவனங்களும் மத்திய வங்கியினால் நேரடியாக கண் காணிக்கப்படும் என்றார்.

## தமிழர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் பொதுமக்கள் முறையிட்டதையடுத்து கடந்த ஒகஸ்ட் மாதம் ஆளுநரினால் குறித்த கட்டுமானங்களுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் தடையுத்தரவையும் மீறி குறித்த பகுதியில் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அதற்கு எதிராக பொதுமக்கள் செப்டெம்பர் மாதம் மூன்றாம் திகதியன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன் பின்னர் குறித்த பகுதியில் பொரலுகந்த ரஜமஹா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டு தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் எவ்வித அனுமதி இல்லாத நிலையிலும் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு குறித்த பகுதியில் இரண்டு புத்தர்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

பௌத்த மக்களே இல்லாத, தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்ற இப்பகுதியில் இன முறுகலை ஏற்படுத்தும் விதமாகவும், இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முகமாகவும் சிலர் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாகவும், புத்த விகாரையின் கட்டுமானங்களைத் தொடர்ந்து இப்பகுதிகளைச்சூழ சிங்கள மக்களை குடியேற்றும் திட்டம் உள்ளதாகவும் அதிருப்தி வெளியிடப்பட்டுகின்றது.

## கிரிக்கெட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கை எடுக்கும்.

இதற்கு மேலதிகமாக, ஜனாதிபதியின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்படும் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஒருவர், இந்த உப குழுவின் செயலாளர்ஃ இணைப்பாளராகச் செயல்படுவார். இந்த நியமனத்தின் நோக்கம், குழுவின் பணிகளை செயற்திறன் மிக்க வகையில் ஒருங்கிணைப்பு செய்வதை எளிதாக்குவதாகும்.

மேலும், இந்தக் குழுவின் கலந்துரையாடலுக்குஅவசியம்எனக் கருதும்எந்தவொரு அதிகாரி அல்லது குறித்த துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள இந்த உப குழுவுக்கு அமைச்சரவை அதிகாரம் வழங்கியுள்ளது.

இந்த உப குழுவை நியமிப்பதற்கான நோக்கம், இலங்கை கிரிக்கெட்டில் உள்ள பிரச்சினைகளை துரிதமாக தீர்ப்பதற்குத் தேவையான நிபுணர் அறிவைப் பெற்று அதை பரந்த அளவில் பரிசீலிப்பதாகும்.

## யாழ். நகர ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

இதன் முதற்கட்ட நிர்மாணப் பணிகளுக்காக 600 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. இது முழுக்க முழுக்க திறைசேரியில் இருந்து நிதியளிக்கப்பட்ட திட்டமாகும். மொத்தமதிப்பிடப்பட்ட தொகை 2350 மில்லியன் ரூபா ஆகும். யாழ்ப்பாண நகர மண்டபத்தின் நிர்மாணப் பணிகளை 2022 நவம்பரில் முடிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் கோவிட் -19 பரவல் மற்றும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக, இந்த திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தாமதமானது.

எனினும் நான் அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் யாழ். நகர மண்டபத்தின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தேன். இதற்கு தேவையான பணத்தை பெற்றுத்தர திறைசேரி அதிகாரிகளுடன் பல தடவை கலந்துரையாடினேன்.

யாழ்ப்பாணம் மாநகர சபை அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த பழைய யாழ்ப்பாண நகர மண்டபக் கட்டடம் 1939 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 1985 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் மோதல்கள் காரணமாக முற்றாக அழிக்கப்பட்டது.

நல்லூர் கோவிலுக்கு சொந்தமான காணியில் யாழ்ப்பாண மாநகர சபை தற்காலிகமாக இயங்கி வருகின்றது. இதன் காரணமாக யாழ்ப்பாண மாநகர சபையின் பல திணைக்களங்கள் இன்றும் பல்வேறு இடங்களில் இயங்கி வருகின்றன. அதனால் யாழ். மக்கள் கடும் சிரமத்திற்குள்ளாகி உள்ளனர்.

2019 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நகர மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பணியாற்றிய காலப்பகுதியாகும்.

யாழ். நகர மண்டபத்தின் முதற்கட்ட நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதோடு, யாழ்ப்பாண மக்கள் மற்றும் அதிகாரிகளின் கடமைகளை நிறைவேற்றிக்கொடுப்பதற்கும் உரிய தகைமை குறித்து ஆராயுமாறும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரைவிடுத்துள்ளேன் என்றார்.

## கல்வி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி, அடுத்த வருடத்தில் இருந்து, தரம் ஒன்று முதல் தரம் 11 வரையிலான பாடத்திட்டத்தை அதே வருடத்திற்குள் நிறைவுசெய்ய எதிர்பார்த்துள்ளோம். இதன் ஊடாக 2025 ஆம் ஆண்டு கல்வியாண்டை வழமை போன்று நடத்த முடியும்.

நீதிமன்ற நடவடிக்கைகள் காணப்பட்டாலும்கூட அவைகள் நிவர்த்தி செய்யகப்பட்டு, ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள நேர அட்டவணையின் பிரகாரம் எதிர்வரும் ஜனவரி மாதம் உயர்தரப் பரீட்சையை நடத்த முடியும் என்று நான் நினைக்கின்றேன்.

நேரத்தை முறையாக முகாமைத்துவம் செய்து, தற்போது தாமதமாக நடத்தப்படும் அனைத்துப் பரீட்சைகளையும் கட்டம் கட்டமாக நடத்துவதன் மூலம் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டாகும் போது குறித்த வருடத்திற்குரிய பரீட்சைகளை அதேவருடத்தில் நடத்தி முடிக்க அவசியமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

அதேபோன்று, 2024 ஆம் ஆண்டு மே மாதத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது நடத்தி முடிக்கப்பட்ட சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இம் மாதம் மூன்றாவது வாரத்தில் வெளியிடப்படவுள்ளன.

கல்வி நிர்வாக சேவையில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சைகளும் நிறைவடைந்துள்ளன. விரைவாக நேர்முகத் தேர்வுகளை நடத்தி அவர்களுக்கான நியமனங்களை வழங்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

ஆசிரியர் கல்வியியலாளர் சேவை, ஆசிரியர் ஆலோசகர் சேவை மற்றும் ஆசிரியர் வெற்றிடங்கள் உட்பட கல்வி சேவையில் நிலவும் அனைத்து வெற்றிடங்களையும் அடுத்த வருடம் பாடசாலைகளை ஆரம்பிக்க முன்னர் நிரப்புவதற்கு அவசியமான பணிகளை முன்னெடுத்துள்ளோம்.

2024 ஆம் ஆண்டுக்காக கல்வி அமைச்சின் கீழ் 237 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் கல்விக்காக ஒதுக்கப்படும் முழுமையான தொகை இவ்வ

தொடர்ச்சி 8ம் பக்கம்...



காலைக்கதிர் Kalaikkathir

# கிரிக்கெட் சபையில் நானும் இருந்தேன் அது ஊழல் நிறைந்தது என்பது தெரியும்

## மனம் திறந்தார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



முன்னைய வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து மாறுபட்டு மாற்று வரவு செலவுத் திட்டத்தை இந்த வருடம் முன்வைக்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபி விருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் செலவுக்கு ஏற்ற வருமானத்தைப் பெற வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார். அதற்கான முன்மொழிவுகள் நிதியமைச்சிடம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நத்தார் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல் நத்தார் தினத்திற்காக பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வாக கிறிஸ்மஸ் கேக் கலவை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்கள் கேக் கலவையை கலந்து பங்களித்தனர்.

இங்கு ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு -

**கேள்வி :** மின் கட்டணம் உயர்த்தப் பட்டுள்ளது. மக்கள் சிரமத்தில் உள்ளனர். நத்தாரின் போது மக்களுக்கு என்ன நடக்கும்?

**பதில்:** கடந்த சில வருடங்களாக இந்நாட்டு மக்கள் கஷ்டப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். உலகம் பொருளாதார நெருக்கடியில் சிக்கிய போது, இந்நாட்டில் வாழும் அனைவரும் அதனை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்த நாட்டில் மக்கள் எரிபொருள் வரிசையில் இருந்தனர். அத்தியாவசிய மருந்துகள் இல்லை. இந்த நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்தது. அதே சமயம் போராட்டம் வந்து நாடு அழிந்தது. இன்று நாடு ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் இந்த நாட்டை சிறந்த நிலைக்குக் கொண்டு வர முடியும் என நம்புகின்றோம்.

**கேள்வி :** நவம்பர் 13 பட்ஜெட் எப்படி தயாராக உள்ளது?

**பதில் :** அரசாங்கம் என்ற ரீதியில் முன்னைய வரவு -செலவுத் திட்டத்திற்கு மாற்றான வரவு - செலவுத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட்டு மக்களுக்கு செலவுக்கு ஏற்ற வருமா னம் கிடைக்க வேண்டும் என்ற கட்டத்தில் நாங்கள் இருக்கிறோம். அதற்கான யோசனைகளை நிதியமைச் சிடம் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளோம்.

**கேள்வி :** அபிவிருத்திப் பணிகள் நிறுத்தப் பட்டுள்ளனவா?

பதில்: எனது அமைச்சில் முதலீட்டாளர்கள் உள்ளனர். நிறுத்தி வைத்துள்ள வீட்டுத் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். இந்த ஆண்டு இந்தத் திட்டத்தை நாங்கள் செய்கிறோம். அடுத்த வருடம் வீடமைப்பு உதவி மற்றும் வீட்டுக்கடன் திட்டங்களை முன்னெடுக்கத் தயாராக உள்ளோம். வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் எமது அமைச்சின் செயற்பாடுகளை மீண்டும் புதுப்பிக்க முடியும்.

**கேள்வி :** புதிய திட்டங்களை அறிமுகப் படுத்த நீங்கள் தயாரா?

**பதில் :** புதிதாக ஒன்றைச் செய்வதை விட செய்த நல்ல காரியங்களைத் தொடர வேண்டும் என்று நான் தனிப்பட்ட முறையில் நம்புகிறேன். நாடு நின்ற இடத்திலிருந்து முன்னேற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் இருக்கிறோம். நாம் பொருளாதார ரீதியாக வலுவாக இருந்து செலவழிக்க முடிந்தால், புதிய வியங்களை அறிமுகப்படுத்தலாம். தற்போதுள்ள சூழ்நிலையில் நாம் செய்ய விரும்புவது, செய்த நல்ல பணியைத் தொடர வேண்டும்.

**கேள்வி :** சீனியின் வரி அதிகரித்துள்ளது. எரிவாயு விலை அதிகரித்து வருகிறது. பட்ஜெட்டில் குறையுமா? அதிகரிக்குமா?

**பதில் :** எதிர்வரும் 13 ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படும். அதன் பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.

**கேள்வி :** எரிவாயு விலை அதிகரிப்பு பற்றி என்ன கூறுகிறீகள்?

**பதில் :** எங்கள் யாருக்கும் பிடிக்காது. ஏனென்றால் நாம் நகரமயமாக்கலுக்குப் பழகிவிட்டோம். எரிவாயுவில் வாழும் மக்கள். அதிகரிப்பது என்பது அனைவருக்கும் கடினமானது. இது அரசியல்வாதிகள் மட்டுமல்ல, இந்நாட்டின் அனைத்துப் பொருளாதார முகாமைத்துவத்தையும் வழிநடத்தும் நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி அதிகாரிகளும் விரும்பிச் செய்யும் காரியம் அல்ல. நாம் அனைவரும் நலன்புரி அரசாங்கமாகத் தொடர்ந்து செல்வதையே விரும்புகிறோம். பல வருடங்களாக நடந்து வந்ததன் பலனை இப்போது அனுபவித்து வருகிறோம். அதனை உயர்த்துவதே இன்றைய நமது குறிக்கோள். அதற்கு முழு நாடும் ஒரே இடத்தில் திரள வேண்டும். நாங்கள் செய்யும் போது குறை சொல்லி கால்களை இழுக்கக் கூடாது. கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இதேதான் நடந்தது. சுயமாகவே மீள எழும்பி வரும் அரசு நாட்டைக் கட்டியெழுப்ப முயற்சிக்கும் பொழுது கடனில்லாத நாடொன்றை உருவாக்க முயற்சிக்கும் போது, அதன் பிரயோசனத்தை சில எதிர்க்கட்சி எடுத்துக் கொண்டு செய்த வேலை. அதன் பிரதிபலன்களை நாங்கள் அனுபவிக்கிறோம். வெளிநாட்டில் எப்போதும் வாழ முடியாது. சொந்த நாட்டில் வாழ்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

**கேள்வி :** வருகின்றது தேர்தல் ஆண்டு. நீங்கள் எப்படி தயாராக இருக்கிறீர்கள்.

பதில் : அரசியலில் தேர்தலுக்கு பயப்பட முடியாது. அரசாங்கங்கள் வருவதும் போவதும் எங்களுக்குத் தெரியும். கடந்த காலங்களில் ஜே.வி.பி உடன் தொடர்புடையவர்களால் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. அவர்கள் தனிப்பட்ட அமைப்பினருடன் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். கிராமத்தில் உள்ள மொட்டு எம்.பி.க்கள் கிராமத்திற்கு வராத வகையில் அவர்களின் வீடுகளுக்கு மட்டும் தீ வைக்கப்பட்டது. 225 வீடுகள் தீப்பிடித்து எரிந்தால் அந்த மூன்று பேரின் வீடுகளுக்கும் தீ வைக்க வேண்டாமா? நேற்று முன்தினம் பாராளுமன்றத்திற்கு வந்த மொட்டு உறுப்பினர்களின் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன. இது திட்டமிடப்பட்ட ஒன்றாகும். நாங்கள் கிராமங்களை விட்டு வெளியேறுவோம் என்று எதிர்பார்த்தார்கள். எங்கள் எம்.பி.க்கள் மீண்டும் கிராமங்களுக்கு சென்று அரசியல் செய்கிறார்கள். எந்த சவாலையும் சந்திக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

**கேள்வி :** ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுடனா எதிர்காலத்தில் போவீர்கள்?

**பதில்:** இது ஒரு கட்சி எடுக்கும் முடிவு. கட்சி எடுக்கும் முடிவோடு நாங்கள் உடன்படுவோம்.

**கேள்வி :** பொது வேட்பாளராக போட்டியிடும் நபரை ஆதரிப்பீர்களா?

**பதில் :** இந்த சவாலை நாம் எதிர்கொள்ள முடியும். வெற்றி பெறலாம். விட்டுக் கொடுக்காத உழைக்கும் தலைவருக்கு நாங்கள் உதவுவோம்.

**கேள்வி:** கிரிக்கெட் பற்றி உங்கள் கருத்து என்ன? இந்த தோல்வி பற்றி.....?

**பதில் :** வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். வீரர்களாகிய நாங்கள் வெற்றியில் அந்த பெருமையை எடுத் துக்கொள்வதில்லை, தோல்வியில் அதை சாதாரணமாக எடுத்துக்கொள்வதில்லை. ஆனால் நான் இன்றும் நம்புகிறேன், அரசியல் வேறுபாடுகள் இருந்தபோதிலும், பல ஆண்டுகளுக்கு முன்பு அர்ஜுன ரணதுங்க கூறியதை நான் அறிவேன்.

வருடங்கள் செல்ல செல்ல இந்த நாட்டில் கிரிக்கெட் இந்த நிலைமைக்கு தள்ளப்படும். மீண்டுவர முடியாது என்றார். அவர் சொன்னது இன்று உண்மையாகிவிட்டது. கிரிக்கெட் நிர்வாகம் மட்டுமல்ல, பணத்தின் கீழ் இருக்கும் கிரிக்கெட்டையும் அங்கிருந்து அகற்ற வேண்டும். விளையாட்டுத்துறை அமைச்சர் ஏதாவது நல்லது செய்வார் என்ற நாட்டு மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றுங்கள். அவர் நல்ல முடிவுகளை எடுப்பார் என நம்புகிறேன்.

**கேள்வி :** கடுமையான தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னர் பதவி விலகுமாறு கிரிக்கட் சபைக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். வெளியேறவில்லை.

**பதில் :** கிரிக்கெட் சபை வெளியேற வேண்டும். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இடைக்கால நிர்வாகக் குழுவிற்கு விதிக்க முடியாத நிபந்தனைகளைக் கொண்டுள்ளது. அர்ஜுன ரணதுங்க சொல்வது போல் கிரிக்கெட் தேர்தல் நடந்தாலும் முகநூல்காரர்களும் சூதாட்டக்காரர்களும்தான் வெற்றி பெறுவார்கள். கிரிக்கெட்டை விரும்புபவர்கள் அல்லர். நாட்டு மக்களும் அதற்கான பயிற்சி பெற்றுள்ளனர்.

**கேள்வி :** அர்ஜுன ரணதுங்க கூறியமை போல் பணம் பறிக்கப்படுவதை நீங்களும் ஏற்றுக்கொள்கிறீர்களா......?

**பதில் :** நானும் பல வருடங்கள் கிரிக்கெட் சபையில் இருந்தேன். இதில் உள்ள மற்ற ஊழல்கள் எனக்குத் தெரியும்.

**கேள்வி :** அமைச்சரே ஏன் அவைகளை நிறுத்தவில்லை?

**பதில் :** விளையாட்டுத்துறை அமைச்சர் சில நல்ல முடிவுகளை எடுத்து அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறார் என அறிகிறேன்.

அதற்கு அனைவரும் உதவுவார்கள். அப்படிச் செய்தால் ஒரு வரு டத்தில் பலன் கூட எதிர்பார்க்க முடியாது. நாம் கிரிக்கெட்டை வளர்க்க வேண்டுமானால், அர்ஜுன ரணதுங்க தலைவராக இருந்தபோது, கிரிக்கெட் போட்டிகள் நடந்தபோது, திறமையான வீரர்களைத் தேடி காலி, மாத்தறை, யாழ்ப்பாணம் எனப் பல இடங்களுக்குச் செல்வோம்.

அவர்கள் கொழும்புக்கு அழைத்துவரப்பட்டு அங்கு குடியிருப்பு வசதிகள் இருக்கவில்லை. அவர் அனைத்து வீரர்களையும் தனது வீட்டில் வைத்து அவர்களை கிளப்புகளுடன் இணைத்தார். அப்படித்தான் அந்த வீரர்கள் உருவானார்கள். இன்று வீரர்களைத் தேடுவது இல்லை. அந்த போட்டியை வீரர்கள் விளையாடும் நேர சுற்றுப்பயணம் உள்ளது. குழு உணர்வுடன், உங்கள் தனிப்பட்ட சாதனைகளுக்குப் பதிலாக அணியாகப் போட்டியிட்டால் போட்டிகளில் வெற்றி பெறலாம். மேலும் தியாகம் செய்யக்கூடிய அணி இருந்தால், கிரிக்கெட்டில் எதிர்காலத்தை பார்க்க முடியும்.

இந்த நிகழ்வில் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலின் தலைவர் மலித் பெரேரா, மூத்த கிரிக்கட் வீரர் பானுக ராஜபக்ஷ மற்றும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து விருந்தினர்கள் கலந்து கொண்டனர். (05)

# மற்றுமொரு ஆராய்ச்சி கப்பலையும் அனுப்ப அனுமதி கோருகிறது சீனா

சீனா மற்றுமொரு ஆராய்ச்சி கப்பல் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான அனுமதியை கோரியுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2024 முற்பகுதியில் மற்றுமொரு ஆராய்ச்சி கப்பல் இலங்ஷைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான அனுமதியை சீனா கோரியுள்ளது எனினும் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என இரண்டு அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சீன கப்பல்களின் இலங்கை விஜயம் குறித்த இந்தியாவின் கரிசனைகளிற்கு மத்தியில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் முன்னர் போல இலங்கையை சேர்ந்த சகா இல்லாமல் சீனா தனித்து ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கான அனுமதியை கோரியுள்ளது எங்கு ஆராய்ச்சிகளை மேற்கொள்வது என்பதையும் சீனாவே தீர்மானிக்கவுள்ளது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை சீனா அனுமதியை கோரவில்லைபெப்ரவரிநடுப்பகுதியில் கப்பலை இலங்கைக்கு அனுப்புவதற்கான அனுமதியை சீனா கோரியுள்ளது என மிக முக்கிய அதிகாரியொருவர் எக்கனமி நெக்ஸ்டிற்க்கு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வெளி விவகார அமைச்சக பேச்சாளர் இது குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளார். (05)

# காயங்களுடன் யாழ். இளைஞரின் சடலம் வெள்ளவத்தைக் கடற்கரையில் மீட்பு

யாழ்ப்பாண தமிழ் இளைஞர் ஒருவரின் சடலம் வெள்ளவத்தை கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை இளைஞனின் சடலத்தை பார்த்தவர்கள் தெரிவித்த தக வலைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த 28 வயதான சர்வானந்தா கிரு சாந்த் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரின் முகத்திலும் உடலிலும் அடிகாயங்கள் காணப்படுகின்றன.(05)



# நிர்ணயிக்கப்பட்ட விலையை மீறி சீனியை விற்றால் சட்ட நடவடிக்கை

நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக சீனியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் சீனி கையிருப்பு தொடர்பில் புதிய வரித் தொகையின் கீழ் கணக்கீடு செய்து, அதிக விலைக்கு சீனி விற்பனை செய்வதைத் தடுக்கும் வகையில், இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அதன் தலைவர் சட்டத்தரணி சாந்த நிரியெல்ல தெரிவித்தார்.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விலையை விட அதிகமாக சீனியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது நுகர்வோர் அதிகார சபை வழக்குப்பதிவு செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# போதைப்பொருளுடன் சிறைக்காவலர் கண்டி சுற்றிவளைப்பில் கைதாகினார்

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்ததாகக் கூறப்படும் சிறைக்காவலர் ஒருவர் கண்டி நகரில் திகன பஸ் நிலையத்தில் தங்கியிருந்தபோது கைது செய்யப்பட்டதாக கண்டி தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் உடுதும்பர சிறைச்சாலையில் கடமையாற்றும் காவலாளி என்பதும் அவர் அப்பகுதியின் உயர் பொலிஸ் அதிகாரி என்பதும் தெரிய வந்துள்ளது. இவர் இரத்தினபுரி பிரதேசத்தில் வசிக்கும் 30 வயதுடையவர் ஆவார். போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் முன்னர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒருவரிடமிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில், சுற்றிவளைப்பு நடத்தப்பட்டபோதே இவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கிரிக்கெட் சர்ச்சை

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி தொடர்ச்சியாக அடைந்த தோல்விகளை அடுத்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் செயலாளர் பொறுப்பை மொஹான் டி சில்வா இராஜினாமா செய்தார். இந்நிலையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் பதவி விலகவேண்டும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் எச்சரித்திருந்தார். அது நடைபெறாத நிலையில் கிரிக்கெட் சபையின் செயற்பாடுகள் ஞாயிற்றுக்கிழமை முதல் இடைநிறுத்தப்பட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

2022ஆம் ஆண்டு இருபதுக்கு20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான விசேட கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ள இலங்கை கிரிக்கெட் நிறுவன செயற்குழுவின் ஊழல் மோசடிகள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பது அவசியம் என்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நியமனத்தை ஏற்றுக்கொண்டுள்ள அர்ஜுன ரணதுங்க, தனது வாழ்நாளை இலங்கை கிரிகெட்டை மீட்டெடுப்பதற்காக அர்ப்பணிப்பதற்கு தயார் என்று குறிப்பிட்டுள்ளார். அதேசமயம் கிரிக்கெட்டில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் குறித்து ஆராய்வதற்காக அமைச்சரவை உப குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் சபையைக் கலைத்தது தொடர்பில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்று காரணத்தாலேயே அமைச்சரவை உப குழு நியமனம் செய்யப்பட்டிருப்பதாக ஒரு சர்ச்சையும் உருவாகியிருக்கிறது.

எதுஎப்படியிருந்தபோதும் இலங்கைக்கிரிக்கெட்டின் பின்னடைவுகளுக்கான காரணங்கள் குறித்து ஆராய்ந்து அவை நிவர்த்திக்கப்படவேண்டியது அவசியம். அதற்காக அது குறித்து இவ்வளவு இவ்வளவு அதிகப் பிரசிங்கத்தனமும் சர்ச்சைகளும் தோற்றுவிக்கப்படவேண்டுமா என்பதுதான் கேள்வி. உலகக்கிண்ண ஆட்டத்தில் இலங்கை மிக மோசமான திறமையை வெளிப்படுத்தியுள்ளது. இதுவே இந்தச் சர்ச்சைகளுக்கெல்லாம் காரணம்.

கடந்த உலகக் கிண்ண வெற்றியாளரான இங்கிலாந்து அணி இந்தத் தடவை இலங்கை அணியைவிட மோசமான திறமையை வெளிப்படுத்தியுள்ளது. புள்ளிப் பட்டியலில் இலங்கைக்கு அடுத்தே உள்ளது. ஆனால் அந்த நாட்டில் இது குறித்து இவ்வளவு பெரிய சர்ச்சைகள் ஏற்படுத்தப்படவில்லை. இலங்கை மட்டுமே கிரிக்கெட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இப்படி நடந்துகொள்கிறது. இது ஏற்புடையதல்ல.

ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லாதது குறித்தோ, ஆசியப் போட்டியில்கூட ஒரு சில பதக்கங்களை மட்டுமே இலங்கையால் பெற முடிந்திருக்கின்ற போதுகூட அதுபற்றி அக்கறை செலுத்தப்பட்டதில்லை. கிரிக்கெட்டிற்கு மட்டும் ஏன் இவ்வளவு முக்கியத்துவம்? விளையாட்டுத் துறைக்குள் தேவையற்ற அரசியல் தலையீடுகளை நிறுத்தி, அவற்றைச் சுயாதீனமாக இயங்க அனுமதித்து தேவையான நிதி வளங்களை வழங்கினாலே போதுமானது. அதீத அரசியல் தலையீடுகளே விளையாட்டுத்துறை மோசமாகப் பாதிக்கப்படுவதற்கான காரணம். எனவே அது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

விளையாட்டை அதை விளையாடுபவர்களே தீர்மானிக்கும் நிலை ஏற்படுத்தப்படாமல் இலங்கை அணியின் தோல்வி குறித்த விடயங்களைச் சரிசெய்ய முடியாது.

# கற்பகதரு என்னும் அற்புதம்

## பனை தரும் பாங்கான நுங்கு

அங்கம் – 21



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

இலங்கையில் பனைவளம் சிறப்பாகவே இருக்கிறது. இலங்கையில் இருக்கும் பனையைவிட இந்தியாவில் காணப்படும் பனையின் பெருக்கம் மிகவும் அதிகம் என்றுதான் சொல்லலாம். இலட்சக்கணக்கில் இலங்கையில் பனை இருக்க , இந்தியாவிலோ கோடிக்கணக்கில் இருக்கிறது பனை என்பது மிகவும் முக்கியமாகும். இந்தியா எங்கணும் இருகின்ற பனைகளை ஒன்பது கோடி என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும் பனைகளில் ஐந்து கோடிப் பனைமரங்கள் தமிழ் நாட்டிலே இருக்கின்றன என்பது மிகவும் முக்கியமான செய்தியாகும்.

வட தமிழ்நாட்டில் வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ண கிரி, மாவடங்களிலும் -தென்தமிழ்நாட்டில் ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், நெல்லை, தேனீ, மற்றும் திண்டுக்கல் மாவட்ட ங்களிலும் பனைமரங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

பனையிலிருந்து கிடைக்கும் சுவையான நுங்கினைத் தொட்டுப் பார்த்தோம். அந்த நுங்கானது இந்தியாவில் வியாபாரத்திலும் இடம் பெற்று நிற்கிறது. இலங்கையில் யாவரும் நுங்கினை மிகவும் விருப் பத் துடன் சுவைத்தாலும் வியாபாரம் என்னும் நிலைக்கு வரவில்லை என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது. விலை கொடுத்து நுங்கினைச் சுவைக்கும் நிலை இலங்கையில் இல்லை என்றுதான் சொல்லலாம்.

பனை நுங்கின் காலமானது வைகாசி தொடங்கி ஆடி மாதம் வரை இருக்கிறது. இந்தக் காலத்தில் பனை நுங்கு வியாபாரம் இந்தியாவில் களைகட்டத் தொடங்குகிறது. பனை நுங்கின் வியாபாரத்தால் பல தொழிலாளர்கள் பயன் அடைகின்றார்கள். இந்த வியாபாரத்தை நம்பி நேரிடையாகவும், மறைமுக மாகவும் பல இலட்சம் பேர் இருக்கிறார்கள் என்று அறியமுடிகிறது. பனைகளை வைத்திருப்பவரிடம் நுங்குக்காக பனைகளைக் குறிப்பிட்ட காலத்துக்கு வியாபாரிகள் வாங்குகின்றார்கள். இப்படி வாங்குப வர்களில் பெரிய வியாபரிகளும் இருப்பார்கள். சிறிய வியாபாரிகளும் இருப்பார்கள். இவர்களுக் கெல் லாம் நுங்கை பனையிலிருந்து இறக்கிக் கொடுப்பதற்கு தொழிலாளர்களும் இருப்பார்கள். இறக்கிய நுங்கை எடுத்துச் செல்ல மாட்டு வட்டிகள் பயனாகின்றன. மோட்டார் வாகனங்களும் பயனாகி நிற்கின்றன. வெட்டிய நுங்கினை வாகனங்களில் ஏற்றுவதற்கும் பலர் தேவைப்படுகிறார்கள். இந்த வகையில் பனை நுங்கினை மையப்படுத் தி பலரும் தொழில் வாய்ப்பினையும், வருமானத்தையும் பெறக்கூடியதாக இருக்கிறது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.





கோடை காலத்தில் பனை நுங்கின் வியாபாரம் களைகட்டத் தொடங்கிவிடும். தெரு ஓரங்களில் பனை நுங்கினைக் குவித்து வைத்திருப்பர். பிரயாணம் செய்யும் பாதைகளில் இப்படியான பனை நுங்குக் குவியலைக் காணலாம். வண்டியில் செல்லுபவர்கள் வண்டியை நிறுத்தி, நுங்கினை வாங்கிச் சுவைத்து மகிழ்வார்கள். அவர்கள் சுவைத்தால் அதனால் பல தொழிலாளர் பயனை அடைகிறார்கள் என்பதுதான் முக்கியமானது. போவோர் வருவோர் வாங்கி சுவைப்பார்கள் என்னும் நம்பிக்கையால் நுங்கினை விற்பவர்கள் தெரு ஓரங்களில் காத்துக்கிடப்பார்கள்.

ஆண்டுக்கு ஒருமுறைதான் நுங்கினைச் சுவைத்து இன்புறலாம். தமிழ் நாட்டு மக்கள்மட்டும் நுங் கினை சுவைத்து இன்புறவில்லை. கர்நாடக மாநிலம், மைசூர், பெங்களூர், தாவண்கெரே, கோலார், முல்பாகல், மாண்டியா, ராம்நகர் பகுதி மக்களும் - ஆந்திர மாநில மக்களும் நுங்கினை மிகவும் விருப்பத்துடன் சுவைத்து மகிழுகிறார்கள் என்பது நோக்கத்தக்கது.

கோடை என்றதும் எல்லோருக்கும் மனதில் ஒருவித அச்சம். காரணம் வெப்பத்தின் கொடுமை என லாம். அது மட்டுமல்ல. கோடையில் பல வியாதிகளும் வந்து சேர்ந்துவிடுகின்றன. அம்மை நோய்கள் வருகின்ற நிலை பெருதும் இக்காலத்தில் காணப்படுகிறது, நுங்குக்கும் இதற்கும் என்னதான் சம்பந்தம் என்று எண்ணிடத் தோன்று கிறதல்லவா !

சுவைத்துச் சாப்பிடத்தான் நுங்கு என்று எண்ணிவிடக் கூடாது. சுவைத்துச் சாப்பிட இருக்கும் நுங் கில் பல மகத்துவங்களும் பொதிந்து கிடக்கின்றன என்பதுதான் இங்கு முக்கியமாகும். பனையின் நுங்குதானே என்றெண்ணிச் சாதாரணமாய்க் கருதிவிடல் பொருத்தமற்றதாகும். கோடை காலம் வந் த தும் எமது உடம்பில் இருக்கின்ற நீரினது அளவு விரைவாகவே குறைந்து விடுகிறது. இப்படி வரும் பொழுது நாங்கள் சோர்வடையும் நிலை ஏற்பட்டு விடுகிறது. இப்படியான வேளையில் நுங்கு எமக்குக் கைகொடுத்து நிற்கிறது. உடலுக்குத் தேவையான நீர்ச் சத்து நுங்கில் அதிகளவில் காணப்படுகிறது.

(5ஆம் பக்கம் பார்க்க..)



காலைக்கதிர் Kalaikkathir

# கற்பகதரு என்னும் அற்புதம்............



(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உடலில் கனிமச் சத்து பேணப்படுவது மிகவும் முக்கியமானது. அதற்கும் நுங்கு கைகொடுக்கிறது, இன்று பலருக்கும் காணப்படும் பிரச்சினையே சர்க்கரை அளவு அதிகரித்துக் காணப்படுவதேயாகும். நுங்கு சர்க்கரையின் அளவினை சீராக வைத்திருக்கவும் உதவிநிற்கிறது. வைட்டமின் பி, சி, யும் இருக்கிறது. அதுமட்டுமல்ல இரும்புச்சத்து, கல்சியம், பொட்டாசியம், மங்கனீசியம் துத்தநாகம், தயமின், அஸ் கார்பிக் அமிலம், புரதம், போன்ற சத்துக்களையும் நுங்கு தன்னுள் வைத்திருக்கிறது என்பது கருத்திருத்த வேண்டிய விடயமாகும்.

கோடையின் கொடையாகச் சின்னம்மை வந்தால் அதனால் ஏற்படும் உடல் உபாதைகளை அகற்று வதற்கு நுங்கு வந்து துணையாகி நிற்கிறது. சின்னம்மையினால் உடலில் அரிப்புகள் ஏற்படும்.அதனைத் தடுப்பதற்கு நுங்குஉதவிநிற்கிறது.சின்னம்மைநோயினை வராமல் தடுப்பதற்கும் வந்தபின்னர் விரைவாக மாறுவதற்கும் நுங்கு கைகொடுத்தே நிற்கிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கும் பயனளிக்கும் ஒன்றாக நுங்கு விளங்குகிறது. கருவுற்ற பெண்களுக்கு வயிற்றில் குழந்தை வளருகின்ற பொழுது உண்ணும் உணவில் செரிமானச்சிக்கல், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வாயுத்தொல்லை, ஏற்படும். இவற்றை யெல்லாம் தீர்ப்பதற்கு நுங்கு துணையாக நிற்கிறது,

நுங்கு என்பது சுவையோடு எமக்கான உடற்சுகத்துக்கும் ஆதாரமாகவே இருக்கிறது. இதனை நம்பில் பலரும் அறியாமலே இருக்கிறார்கள். நுங்குதரும்பயன்களைஅறிந்தால் அதனைச் சாதாரணமாகப் பார்க்கவே மாட்டோம். கோடையின் வெம்மையினாலும் அதிக நேரம் கண்விழித்து இருப்பதனாலும் -கண்களில் எரிச்சலும், கண்களில் வலியும் ஏற்படுகிறது.இப்படியானநிலைமைகள்யாருக்கு ஏற்பட்டாலும் அவர்கள் நுங்கினைத் தினமும் காலையிலே சாப்பிட்டுவந்தால் அவர்களின் கண்களில் காணப் படும் நோய்கள் அகன்றே போய்விடும். அதுமட்டுமல்ல நுங்கினைச் சாப்பிடுவதால் கண்களின் பார் வையும் சீராகிறது என்று அறிந்திட முடிகிறது.

இன்று சர்க்கரை வியாதி பலருக்கும் உள்ளதுபோல் உடல் பருமனாவதும் ஒரு வித வியாதியாகவே இருக்கிறது. உடல் பருமன் ஆகிவிட்டால் அதனால் அழகும் கெட்டுவிடும். ஆரோக்கியமும் கெட்டு விடும். அதனால் யாவரும் பருமனாகாது உடலைப் பாதுகாத்திடப் பல வழிகளை நாடித் தேடி ஓடிக் கொண்டே இருக்கிறார்கள். ஓடுபவர்களே நில்லுங்கள்! உங்கள் உடலெடையினைக் குறைக்க அருமை யான வழி இருக்கிறது! அது வேறு ஒன்றுமல்ல! நுங்கினைச் சாப்பிடுங்கள். உடற்பருமன் தானாகவே ஓடிவிடும். அதிகமாய் ஏற்படும் பசியினை நுங்கு தடைசெய்கிறது. நுங்கினைச் சாப்பிடுவதால் உட லின் நீர்ச் சுரப்பு அதிகரிக்கிறது. இப்படி நீர்ச்சுரப்புஅதிகரிப்பதால்உடலின்எடையானது குறைவதற்கு வாய்ப்பாக இருக்கிறது,உடல் எடை ஆணுக்கும் வருகிறது, பெண்ணுக்கும் வருகிறது. பெண்களுக்கு மட்டுமே வரக்கூடிய ஒரு பொல்லாத வியாதிதான் மார்பகப் புற்றுநோயாகும் இயற்கை உணவுகளை எடுப்பதால் இந்த நோயினைத் தடுக்கலாம் என்று அறிகிறோம்.



இயற்கைஉணவென்னும் பொழுது நுங்கும் அங்கு வந்து அமைகிறது. நுங்கில் காணப்படும் ஆந்தோ சனியம் என்னும் வேதிப் பொருளானது புற்று நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு பெருமளவில் உதவி நிற்கிறது என்பது கருத்திருத்த வேண்டிய விடயமெனலாம். நுங்கினை மூடி ஒரு தோல் இருக்கும். அத்தோலுடன்நுங்கினைச் சுவைக்கும் பொழுது துவர்ப்புச்சுவை ஏற்படும். துவர்ப்புச் சுவையினை அளிக்கும் நுங்கின் தோல் மிகவும் முக்கியமான பகுதி யாகும். அந்தப் பகுதியில்த்தான் பல உயிர்ச்சத்துகள் இருக்கின்றன என்பது முக்கியமாகும். நுங்கில் மூன்றுபகுதிகள் இருக்கின்றன. நுங்கிலே காணப்படு கின்ற தசை, நுங்கிலே காணப்படும் மேற்றோல், நுங்கிலே இருக் கின்ற நீர். அத்தனையும் எமது ஆரோ க் கியத்துக்கு அருந்துணையாக இருக்கிறது என்பதை அகமிருத்துவது மிகவும் அவசியமாகும். நகரத்தில் நாகரிகம் நிறைந்திருக்கிறது. கிராமங்கள் அந்தளவு நவநாகரிகத்தைத் தொடவில்லை என்றுதான் சொல்லலாம். ஆனால் கிராமத்தின் மண்வாசனையை நகரத்தில் நுகரவே முடியாது. நகரத்தாரின் வாழ்க்கை முறை வேறு. அவர்கள் கிராமத்தின் உயிர்த்துடிப்பை உணர்ந்தால் நல்ல ஆரோக்கியத்தை அணைத்துக்கொள்ள முடியும் என்னும் கருத்தும் இருக்கிறது என்பது குறிப்பிடப்படவேண்டியதேயாகும். அந்த வகையில் நுங்கினையும் நகரத்தார் நினைத்துப் பார்ப்பது சிறப்பாக இருக்கும்.

விருந்தாயும் மருந்தாயும் நுங்கு விளங்குகிறது. வெய்யில் காலங்களில் பலருக்கும் மேலில் ஒருவித பருக்கள் வருவது உண்டு. இந்தப் பருக்கள் வந்தால் மேலெல்லாம் ஒரே அரிப்பு ஏற்படும். எந்த நேரமும் கையினைக் கொண்டு சொறிந்தபடி இருக்கும் நிலை ஏற்பட்டுவிடும். சொறிந்து கொண்டே இருப்பதற்கு காரண மாக வருவதுதான் வியர்க்குரு என்னும்ஒன்றாகும். மேலெல்லாம் இந்த வகையான வியர்க்குரு வந்தால் அது பெரிய பிரச்சினையாகவே மாறிவிடும். இப்படியான வியர்க் குருவின் பிடியிலிருந்து விலகுவதற்கு நுங்கின் இனிப்பாய் இருக்கும் நீர் கைகொடுக்கிறது என்பதை நம்மில் பல பேருக்கும் தெரியாது. அந்த இனிப்பான நீரை வியர்க்குருவில் தடவினால் தோலில் ஏற்படும் எரிச்சல் பறந்தோடியோ போய்விடும். வியர்க்குருவும் காணாமலே போய்விடும்.

ஞாபக சக்தியென்பதுதான் எமக்குக் கிடைத்த நல்ல வரமாகும். அந்த ஞாபசக்தியை அதிகரிக்க நுங்கு துணையாக வந்து நிற்கிறது.பெரியவர்களுக்கு மட்டுமல்லாது சிறியவர்களுக்கும் நுங்கு துணையாகி நிற்கிறது.சிறியவர்கள் நுங்கினை மிகவும் விருப்பத்துடன் சுவைத்து மகிழுவார்கள். அப்படிச் சுவைத்து மகிழும் சிறுவர்களுக்கு வருகின்ற வயிற்றுக்கடுப்பு, மலச்சிக்கல், மூலச் சூடு, வயிற்றுவாயு ஆகிய நோய்களை அகற்றுவதற்கு அவர்கள் சுவைக்கும் நுங்கே மருந்தாகவும் அமைகிறது. நுங்கின் மேல் காணப்படும் தோலினை அரைத்து இந்தவிதமான நோய்களுக்கான மருந்தாகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது கருத்திருத்த வேண்டிய விடயமெனலாம்.

**சின்ன சின்ன நுங்கு**
**செங் கரும்பு நுங்கு**
**தின்னத் தின்ன இனிக்கும்**
**திகட் டாத நுங்கு**

**தாகம் தீர்க்கும் நுங்கு**
**தண்ணீர் போல நுங்கு**
**தேகச் சூடு நீங்கச்**
**செய்யும் சின்ன நுங்கு**

**நுங்கை வெட்டித் தின்றேன்**
**நுங்கு வண்டி செய்தேன்**
**நுங்கு வண்டி செய்தே**
**நுட்பம் ஒன்றைக் கண்டேன்**

**நீர்வராவியக்குருவைநீக்குமனலாக்குந்தோற்**
**சார்வா மயஞ்சீதந் தானொழிக்குஞ் -சேர்வார்**
**விழிக்கரையாந் துள்ளிக்கு மென்சுரத மானே**
**கழிக்கரையாந் தாளியிளங் காய்.**


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலுமு, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்


பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL




### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with
Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| Ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| Ice Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| JUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swabpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர்; ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தீர்மானம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளை மையப்படுத்தி பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதென ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

அத்துடன், இந்தத் தீர்மானம் தொடர்பில் மாவை சோ.சேனாதிராசா தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றுடன் தனித்தனியாகக் கலந்துரையாடுவதெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் கூட்டம் மன்னாரில் உள்ள ரெலோவின் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் குறித்த கூட்டணியில் அங்கத்துவம் பெற்றுள்ள ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் செயலாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பங்கேற்றிருந்தனர். இந்நிலையில் குறித்த கூட்டம் சம்பந்தமாக அக்கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் சம்பந்தமாகக் கவனம்செலுத்தியதோடு ஆழமான ஆய்வுகளைச் செய்து தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

முதலாவதாக, வடக்கில் முன்னெடுக்கப்பட்ட மனிதச் சங்கிலிப் போராட்டம் மற்றும் வடக்கு, கிழக்கு தழுவிய ஹர்த்தால் ஆகியவற்றின் சாதக, பாதக நிலைமைகள் சம்பந்தமாக ஆராயப்பட்டதோடு, ஆட்சியாளர்களின் ஜனநாயகவிரோதமான மற்றும் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளுக்கு எதிராக வடக்கு, கிழக்கு தழுவிய பெரும் போராட்டங்களை அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்புடன் எதிர்காலத்திலும் முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாவதாக, மயிலத்தமடு மதவனை பண்ணையாளர்களின் மேய்ச்சல்தரைக்கான நியாயமான கோரிக்கை தொடர்பாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானம் உடனடியாக அமுலாக்கப்பட வேண்டும் என்பதோடு அதில் தாமதங்கள் காணப்படுமிடத்து, ஆட்சியாளர்களுக்கு அழுத்தமளிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, சுற்றுச்சூழல் சம்பந்தமாக கரிசனையோடு உணர்வு ரீதியாக மன்னார் தீவிலும், அதற்கு வெளியில் உள்ள பகுதிகளிலும் தனியாருக்குச் சொந்தமான நிலங்களை வெளிநாட்டு நிறுவனங்களின் பல இலட்சங்கள் பெறுமதியான கொடுப்பனவுக்காக பொதுமக்கள் விற்பனை செய்வதை தடுக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதோடு அதற்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நான்காவதாக, வடக்கு மாகாணத்திற்கு ஏனைய நாடுகளின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் போன்று சீனத்தூதுவரும் விஜயங்களை மேற்கொள்வதில் எவ்விதமான பிரச்சினைகளும் கிடையாது. எனினும், தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் என்ற பெயரில் உலருணவுப்பொதிகளை வழங்குவதன் ஊடாக சமூக ரீதியான குழப்பங்களை ஏற்படுத்துவதையும், அதேபோன்று, இந்தியாவுக்கு மிகவும் அண்மித்த பகுதியாக வடக்கு காணப்படுகின்ற நிலையில் பிராந்திய பதற்றங்களை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாதென்பதை வெளிப்படுத்துவதெனவும் தீர்மா

ஐந்தாவதாக, தொடர்ச்சியாக, தென்னிலங்கையின் தலைவர்கள் தமிழ் மக்களுக்கான வாக்குறுதிகளை வழங்கி வருகின்றபோதும், அவற்றை நிறைவேற்றுவதில் கரிசனைகளைக் கொண்டிருக்காத நிலைமை தொடருகின்றமையால், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதெனவும், அந்த வேண்பாளருக்கு வடக்கு,கிழக்கு உள்ளிட்ட தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக தென்னிலங்கைக்கும், சர்வதேசத்துக்கும் நிலைமைகளை அம்பலப்படுத்த முடியுமெனவும் எதிர்பார்க்கப்படுவதோடு அவ்விதமான பொதுவேட்பாளரை நிறுத்தும் முயற்சி தொடர்பில் இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றுடன் தனித்தனியான கலந்துரையாடல்களை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆறாவதாக, வடக்கு,கிழக்கில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மாவட்டக் கிளைகளை ஸ்தாபிப்பதோடு, கூட்டணியின் தேசிய அமைப்பாளர் கோவிந்தன் கருணாகரத்தின் செயற்பாடுகளுக்கு பக்கத்துணையாக வடமாகாணத்திற்கு குருசுவாமி சுரேனையும், கிழக்கு மாகாணத்துக்கு இரா.துரைரெட்ணத்தையும் துணை அமைப்பாளர்களாக நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏழாவதாக, தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக தமிழ்த் தேசியத் தரப்பில் உள்ள ஏழு கட்சிகள் பொதுவான தளத்தில் நின்று பயணிப்பது மற்றும் ஏகோபித்த தீர்மானங்களை எடுப்பது தொடர்பில் பொதுவான மத்தியஸ்தர்களின் துணையுடன் ஒத்துழைப்புக்களை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. - என்றார். (05)

## சட்ட விரோதமாக கடலட்டை பிடித்த நால்வர் குருநகர் கடற்பரப்பில் கைது

*யாழ்ப்பாணம்-குருநகர் கடல் பகுதியில் அனுமதியின்றி சட்ட விரோதமாக கடலட்டை பிடித்த நால்வர் ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*அவர்கள் கடலட்டை பிடித்துக் கொண்டிருந்தவேளை, மண்டைதீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களது படகு ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டது.*

*கைதான நால்வரும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.*

*கைதான நான்கு பேரும் யாழ்ப்பாணத்தில் உள்ள நீரியல்வள திணைக்களத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னர், நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*(05)*






## கல்வி ....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ளவுதான் என்று தவறாக நினைக்க வேண்டாம். இதனுடன் மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர் சம்பளம், முதலீட்டுச் செலவுகள் மற்றும் நிர்வாக செலவுகள் அனைத்தும் மாகாண சபைகளின் கீழ் உள்ள கல்வி அமைச்சினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அனைத்து நிதிகளையும் ஒன்று சேர்த்தே அரசு கல்விக்காக ஒதுக்கும் முழுமையான தொகையைக் கணக்கிடவேண்டும்.

அதேபோன்று, கல்வி மறுசீரமைப்புக்கான கொள்கை கட்டமைப்பிற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. இது நாடாளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுவின் ஒப்புதல் கிடைத்த பிறகு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். அரசு அல்லது அமைச்சர்கள் மாறும்போது தேசிய கல்விக் கொள்கை மாறக்கூடாது.

2024 ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணிகள் நடந்து வருகின்றன. சில பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணி 60 சதவீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. 80 சதவீத பாடசாலை சீருடைகள் இலவசமாக எமக்குகிடைக்கவுள்ளன. 2030ஆம் ஆண்டுக்குள் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்குவதே எமது இலக்காகும்.

உலகஉணவுவேலைத்திட்டம், யுஎஸ் எய்ட் (USAID) மற்றும் தனியார் துறையினரும் இதற்காக வழங்கும் ஆதரவைத் தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்கான பல்வேறு திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம். இந்த வேலைத் திட்டத் திடத்திற்காக ஒரு நிதியத்தை ஆரம்பிக்கும் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

க.பொ.த. சாதாரணதரப்பரீட்சை மற்றும்உயர்தரப்பரீட்சைஆகியவற்றுக்குப் பிறகு மாணவர்களுக்கு ஆங்கில மொழி, திறன் விருத்தி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை உள்ளிட்ட பல்வேறு தொழில்முறை பயிற்சிகளை வழங்கஅரசுபல்வேறுதிட்டங்களை ஆரம்பித்துள்ளது என்றார்.

## கண் பார்வை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றையதினம் யாழ்ப்பாணத்தில்வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கண்ணில் பார்வை குறைவு ஏற்படுவதற்கு முக்கியமாக ஐந்து நோய்கள் தான் இருக்கின்றன, ஒன்று வென்புறை, இரண்டாவது கண்ணாடிஅணிதல், க்ளுக்கோமா, நீரிழிவு நோய், வயது காரணமாக வருகின்ற விழித்திரு நோய் இந்த ஐந்து நோய்களும்தான் இலங்கையை பொறுத்தவரையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. இந்தத் தாக்கங்களிலிருந்து விடுபடவேண்டும் என்றால் வாழ்க்கை நடைமுறைகளில் எங்களால் இயலுமானவற்றை நாங்கள் பின்பற்றுதல் வேண்டும். முக்கியமாக எங்களுடைய உணவு பழக்க வழக்கங்களில் நாங்கள் கூடுதலான பழ, மரக்கறி வகைகள் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

அத்தோடு நாளாந்தம் சன் லைட்டிங் அளவு கண்ணில் படுவதை குறைத்துக் கொள்ள வேண்டும் (சரியான பொப்பிகளை அணில் வேண்டும்), மூன்றாவது மாணவர்கள் மற்றும் அனைவரும் தங்களுடைய டிவைஸ் நேரத்தை குறைக்க வேண்டும். இந்த மூன்று நடைமுறைகளையும் நீங்கள் பின்பற்றினால் இனி வரும் காலங்களில் பிரச்சனைகளை குறைத்துக் கொள்ள கூடியதாக இருக்கும்.

நான்காவது மிக முக்கியமானது தற்போது நடைமுறையில் இல்லை என நினைக்கிறேன் ரத்த உறவு திருமணத்தை இயலுமாணவரை குறைத்துக் கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில் காலனிலை மாற்றங்களும் இந்த கண் நோய்களை கூட்டிக்கொண்டே போகும் என கூறுகின்றார்கள் இதனால் காலநிலை மாற்றங்களுக்கும் நாங்கள் உதவி செய்ய வேண்டி இருக்கின்றது.

இந்த ஐந்து விடயங்களும் மிக முக்கியமான விடயங்கள் இது அனைத்தும் செய்யக்கூடிய விடயங்களாக இருக்கின்றது. இதன் மூலம் பொதுவாக ஏற்படுகின்ற கண் நோயின் தாக்கத்தினை குறைக்க முடியும் என தெரிவித்தார்.

## அமெரிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி வங்கிகளின் தலைவர்களையும் சந்திக்கும் அதேவேளை, அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடனும் பேச்சுக்களில் ஈடுபடுவார்.

மேலும் அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் நிதியுதவியில் வணிகங்களை மேற்கொள்ள எவ்வாறு துணைபுரிகிறது என்பதை அவதானிப்பதற்காக அதன் வாடிக்கையாளர்களின் வசதிகளையும் பார்வையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குடாநாட்டின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் நடந்த நிகழ்வில் இன்று காலை தெரிவு செய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கு உலர் உணவுபொதிகளை சீனத் தூதுவர் வழங்கி வைத்தார்.

நெடுந்தீவு மக்களுக்கு 500 உலருணவுப் பொதிகள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் சீனத் தூதுவரால் வழங்கி வைக்கப்பட்டது.

நாவற்குழி ஸ்ரீ சமித்தி சுமன விகாரையில் இடம்பெற்ற நிகழ்வில் சிங்கள மற்றும் தமிழ் குடும்பங்களுக்கு 250 உலருணவுப் பொதிகளை சீனத்தூதுவர் வழங்கி வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் பழைய கச்சேரி கட்டடத்தொகுதி, இலங்கையின் முனையான பருத்தித்துறை சக்கோட்டை பகுதிக்கும் சீனத் தூதுவர் நேரில் சென்று பார்வையிட்டார். இந்நிலையில் நாளைய தினம் செவ்வாய்க்கிழமை சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் நயினாதீவு உள்ளிட்ட தீவகப்பகுதிக்குச் செல்லவுள்ளனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
**076 3983858**
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை தமிழ் அரசியல் கட்சிகள் சந்திக்காதது ஏன்?

## தெளிவுபடுத்துகிறார் சுமந்திரன்



இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் இலங்கை விஜயம் குறித்த தகவல்கள் 'நாம் 200' நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் இரகசியமாக பேணப்பட்டமையால், அவருடனான சந்திப்புக்கு அனுமதி கோருவதற்குத் தமக்குப் போதுமான கால அவகாசம் இருக்கவில்லை என இலங்கைத் தமிழ்அரசுக்கட்சியின்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்திய வம்சாவளி மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்து-வரப்பட்டு 200 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு கடந்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'நாம் 200' நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்துகொள்வதற்காக நாட்டுக்கு வருகை தந்திருந்த இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களில் மகாநாயக்கதேரர்களை சந்தித்துக்கலந்துரையாடியிருந்தார்.

அது மாத்திரமன்றி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான பௌத்த தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கான செயற்திட்டங்களுக்காக இந்திய அரசால் 15 மில்லியன் டொலர்களை அன்பளிப்புச் செய்வதற்கான இருதரப்பு ஆவணங்கள் ஜனாதிபதிக்கும் இந்திய மத்திய நிதியமைச்சருக்கும் இடையிலான சந்திப்பின்போது பரிமாறிக் கொள்ளப்பட்டன. ஆனால் இந்திய அரசின் சார்பில் தலைவர்கள் எவரேனும் இலங்கைக்கு வருகைதந்தால், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துவிட்டுச்செல்லும்வழக்கத்துக்கு மாறாக, இம்முறை நிர்மலா சீதாராமனுக்கும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெறவில்லை. எனவேஇச்சந்திப்புஇடம்பெறாமைக்கான காரணம் என்னவென்று வினவியபோதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'நாம் 200' நிகழ்வில் பங்கேற்பதற்காக இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாட்டுக்கு வருகைதருகிறார் என்ற விடயம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களால் மிகவும் இரகசியமாகவே பேணப்பட்டது. நிர்மலா சீதாராமனின் வருகை குறித்து அவர்கள் முன்னரே எம்மிடம் கூறியிருந்தால், நாம் அவரைச் சந்திப்பதற்கு கால அவகாசம் கோரியிருப்போம். எனவே இதனை எம்மிடம் கூறுவது பற்றி இந்நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள்தான் சிந்தித்திருக்கவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் 'நாம் 200' நிகழ்வில் பங்கேற்றிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷி தரூர், பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட பிரதிநிதி ராம் மாதவ், பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை ஆகியோரை நிகழ்வில் வைத்து சந்தித்து கலந்துரையாடியதாகத் தெரிவித்த சுமந்திரன், அவர்கள் நாட்டின்சமகாலநிலைவரம்குறித்து கேள்வி எழுப்பியதாகவும், அதற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தீவிரமடைந்துவரும் காணி அபகரிப்புஉள்ளிட்டவிடயங்களைச் சுட்டிக்காட்டி தான் பதிலளித்திருந்தார் எனவும் குறிப்பிட்டார்.

அதேவேளை இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் சந்திப்பு இடம்பெறாமை குறித்து கருத்து வெளியிட்ட ரெலோவின்தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், இவ்விடயத்தில் இந்தியாவை குறை கூற முடியாது எனவும், தமக்கிடையே ஒற்றுமை இல்லாத நிலையில் 'யாரை சந்திப்பது?' என்ற கேள்வி அவர்களுக்கு இருக்கக்கூடும் எனவும் தெரிவித்தார். மேலும், இலங்கையில் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்கு இந்தியாவின் நிதியுதவிகள் பயன்படுத்தப்படும் பட்சத்தில், அவற்றை குறைத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (05)

# வீடுகள் உடைத்து கொள்ளையிட்ட நபரை மடக்கிப் பிடித்த மட்டு. நகர பொலிஸார்

## பெருமளவு பொருள்கள் மீட்பு



மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு இடங்களில் வீடுகளின் ஜன்னல் கிறில்களை கழற்றி உள்ளே நுழைந்து, நகை உட்பட பெருமளவிலான இலத்திரனியல்உபகரணங்களைகொள்ளையிட்ட நபரை ஞாயிற்றுக்கிழமை காலை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த மே 21ஆம் திகதி மட்டக்களப்பு - திருமலை வீதியிலுள்ள வீடு ஒன்றை பூட்டிவிட்டுச் சென்ற வீட்டு உரிமையாளர்கள், 23ஆம் திகதி மீண்டும் திரும்பி வந்து பார்த்தபோது, வீட்டின் ஜன்னல் கிறில் கழற்றப்பட்டு, வீட்டிலிருந்த 25,000 ரூபா பணம், மணிக்கூடு, கவரிங் அலங்கார நகைகள் திருடப்பட்டிருந்தமை தெரிய வந்துள்ளது.

குமாரபுரம், காளிகோயில் வீதியிலுள்ள மற்றுமொரு வீட்டை, அதன் உரிமையாளர் கடந்த ஜூலை மாதம் 10ஆம் திகதி மூடிவிட்டுச் சென்று, மீண்டும் 16ஆம் திகதி வந்து, வீட்டை திறந்து பார்த்தபோது, இரண்டு மோதிரங்கள், தொலைக்காட்சிப் பெட்டி, கணினி உபகரணங்கள் திருடப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

குறித்தசம்பவங்கள் தொடர்பாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் நடத்தியதேடுதல்விசாரணையின்போது வாழைச்சேனை ஹைராத் வீதியைச் சேர்ந்த 26 வயது இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு, அவரது வீட்டிலிருந்து திருடப்பட்ட பொருள்களை பொலிஸார் மீட்டுள்ளனர். குறித்த சந்தேக நபர் பல இடங் களில் நீண்டகாலமாக திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புபட்டு, பல முறை விளக்கமறியலில் வைக்கப்பட்டவர் என கூறப்படுகிறது.

கைதானநபர்மட்டக்களப்புநீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (05)






# நீதி நிலைநாட்டப்பட்டாக வேண்டும் தினேஸ் சாப்டர் குடும்பம் வலியுறுத்து



பிரபல வர்த்தகர் தினேஸ் சாப்டரின் மரணம் குறித்து வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத்; தீர்ப்பைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினர் பின்வரும் அறிக்கையைவெளியிட்டுள்ளனர்

அவர்கள் அதில் தெரிவித்துள்ளதாவது:

நவம்பர் முதலாம் திகதி கௌரவத்திற்குரிய நீதிபதி, தினேஸ்சாப்டரின் மரண விசாரணை குறித்து இடம்பெற்ற நீதிமன்ற நடவடிக்கைகளில் அவர் கொலைசெய்யப்பட்டுள்ளார் எனத் தீர்ப்பளித்தார்.

நீண்டகால வலிமிகுந்த காத்திருப்பு முடிவிற்கு வந்தமை குறித்து தினேசின் குடும்பத்தவர்களாகிய நாங்கள் நிம்மதியடைகின்றோம். அந்த விசாரணைகளில் இறுதியாக நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக தினேஸ்சாப்டர் தற்கொலை செய்துகொண்டார் என்ற பிழையான கதையாடல்களால் இழைக்கப்பட்ட அநீதியை தவிர்ப்பதற்கு நாங்கள் கடும் போராட்டத்தில் ஈடுபட்டோம்.

கடந்த பல மாதங்களாக தினேசின் உடல் அகழப்பட்டு ஒய்வுமறுக்கப்பட்டு நாங்கள் கல்லறையின்றி அந்த துயரத்தை அனுஸ்டித்தோம்.

தற்போது இறுதியாக தினேஸ் கொலைசெய்யப்பட்டார் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அவரது மரணம் குறித்த உண்மையை உறுதிப்படுத்து-வதற்காகப் பாடுபட்டவர்களுக்கு நாங்கள் நன்றியை தெரிவிக்கின்றோம். மரணத்திற்கான காரணத்தை உறுதிப்படுத்தியது ஓர் ஆரம்பம் மாத்திரமே என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம்.

தினேஸ் கொலை செய்-யப்பட்டுள்ளார் என்பது மேலும் அநீதி இழைக்கப்படுவதைத்; தவிர்த்துள்ளது அவ்வளவு மாத்திரமே -இதன் மூலம் நீதி நிலைநாட்டப்பட்டு விட்டதாகக் கருத முடியாது.

நீதித்துறையினர் தொடர்ந்தும் தினேசின் மரணத்திற்கு நீதியை நிலைநாட்டுவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

தினேஸ் எங்களின் பல சுமைகளை சுமந்ததுடன் நலிந்தவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், கைவிடப்பட்டவர்கள் நோக்கிதனது கரங்களைநீட்டினார். எங்கெல்லாம் அநீதியை பார்த்தாரே அங்கெல்லாம் அதற்கு எதிராக போரிட்டார். - எனத் தெரிவித்துள்ளனர். (05)

# மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் மீண்டும் ஹிஸ்புல்லாவிடம் உத்தியோகபூர்வமாக கையளிப்பு

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாவால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகம் அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்டு, 4 வருடங்களின் பின்னர், மீண்டும் அதனை ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சம்பிரதாயபூர்வமாக சனிக்கிழமை புனானையில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் வைத்துஏ.எல்.எம்.ஹிஸ்புல்லாவிடம் கையளித்தார்.

மட்டக்களப்பு புனானையில் 400 ஏக்கர் நிலப்பரப்பில் தனியார் பல்கலைக்கழகத்தை முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லா நிர்மாணித்து வந்துள்ள நிலையில், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர், அதனைஅரசாங்கம்கையகப்படுத்தியது.

அதனைதொடர்ந்து, இராணுவப் பாதுகாப்பில் இருந்து வந்த பல்கலைக்கழகத்தை இராணுவத்தினர் கொரோனா நோய்க்கான சிகிச்சை முகாமாகப் பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் கல்வியை மேம்படுத்துவதற்காக இப்பல்கலைக்கழகத்தை வழங்குமாறு ஜனாதிபதியிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய, இதனை மீண்டும் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாவிடம் வழங்கு-



வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் கிழக்கு மாகாண ஆளுநருக்கு ஆலோசனை மற்றும் பணிப்புரை வழங்கப்பட்டது.

அதன் பின்னரே, இந்த தனியார் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் உரியவரிடம்வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் கலந்துகொண்டு பல்கலைக்கழக திட்டங்களை கேட்டறிந்ததோடு, கற்றல் பகுதிகளை சென்று பார்வையிட்டார்.

பின்னர், குறித்த பல்கலைக்கழகத்தின் திறப்பை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாவிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# கனகபுரம் மாவீரர் துயிலும் இல்ல சிரமதான பணி முன்னெடுப்பு






கிளிநொச்சி, கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சனிக்கிழமை சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகள், மாவீரர்களின் உறவினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு இச்சிரமதான பணிகளை முன்னெடுத்திருந்தனர். (05)

# சீனாவை காண்பித்து ஒருபோதும் இந்தியாவை நாம் அச்சுறுத்தோம்

எமக்கு ஆதரவாக செயற்படாவிடின் நாம் சீனாவுடன் சேர்ந்துவிடுவோம் எனக்கூறி இந்தியாவை அச்சுறுத்தும் வகையில் தாம் ஒருபோதும் செயற்படப்போவதில்லைஎனத்தெரிவித்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், மானசீகமான முறையில் தாம் இந்தியாவின் நண்பராகச் செயற்படுவதாகக் குறிப்பிட்டார்.

இந்தியவம்சாவளிமலையகமக்கள்இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு கடந்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'நாம் 200' நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொள்வதற்காக நாட்டுக்கு வருகைதந்திருந்த இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களில் மகாநாயக்க தேரர்களை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அதுமாத்திரமன்றி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான பௌத்த தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கான செயற்திட்டங்களுக்காக இந்திய அரசாங்கத்தால் 15 மில்லியன் டொலர்களை அன்பளிப்புச் செய்வதற்கான இருதரப்பு ஆவணாங்கள் ஜனாதிபதிக்கும் இந்திய மத்திய நிதியமைச்சருக்கும் இடையிலான சந்திப்பின்போது பரிமாறிக்கொள்ளப்பட்டன.

ஆனால் இந்திய அரசாங்கத்தின் சார்பில் தலைவர்கள்எவரேனும்இலங்கைக்குவருகைதந்தால், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துவிட்டுச் செல்லும் வழக்கத்துக்கு மாறாக, இம்முறை நிர்மலா சீதாராமனுக்கும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெறவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் அரசியல் தீர்வு உள்ளிட்ட தமிழர் நலன்களில் இந்தியாவுக்கு அக்கறை இல்லை எனவும், தமது நாட்டின் தேசிய பாதுகாப்புசார் நலன்களை முன்னிறுத்தியே வட, கிழக்கு தமிழ் அரசியல் தலைமையை இந்தியா பயன்படுத்திக்கொள்கின்றது எனவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்தியாவின் போக்கு, சீனத்தூதுவரின் யாழ் விஜயம் மற்றும் இந்தியா - சீனா விவகாரத்தில் நடுநிலையாக செயற்படல் என்பன தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே சுமந்திரன் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

சீனத்தூதுவரின் யாழ் விஜயம் குறித்து தாம் எந்தவொருஎதிர்ப்பையும்வெளியிடவில்லைஎனவும், யாரேனும் யாழ்ப்பாணத்துக்கு வருகைதருவது குறித்து ஏன் எதிர்ப்பை வெளியிடவேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அதேவேளை சீனாவை சார்ந்து செயற்படுவதோ அல்லது 'நீங்கள் எமக்கு ஆதரவாக செயற்படாவிடின், நாம் உங்களுடைய எதிரியுடன் சேர்ந்துவிடுவோம்' என்று இந்தியாவை அச்சுறுத்தும் வகையில் செயற்படுவதோதமக்குப்பொருத்தமானதல்லஎனவும், தாம்ஒருபோதும்அவ்வாறுநடந்துகொள்ளப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் 'நாம் இந்தியாவின் மானசீக நண்பராக செயற்பட்டுவருகின்றோம்' என்று சுட்டிக்காட்டிய சுமந்திரன், நாம் அவர்களது உண்மையான நண்பர்கள் என்பது இந்தியாவுக்கும் தெரியும் என்று குறிப்பிட்டார்.

(05)

# மனைவி தலையை சுத்தியலால் தாக்கி கொலைசெய்தவர் தானும் தற்கொலை

## அளுத்கமவில் சம்பவம்

அளுத்கம, பெனிபெந்திகொட பிரதேசத்தில் தனது 30 வயதான மனைவியை கொலை செய்தார் எனக் கூறப்படும் 36 வயதான கணவர் தானும் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத் தகராறு காரணமாக கணவர் தனது மனைவியை சுத்தியலால் தலையில் தாக்கிக் கொலை செய்துள்ளார். பின்னர், அந்தகணவரும் அவர்களது வீட்டுக்குள்ளே தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்; எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த மரணங்கள் தொடர்பான விசாரணைகளை அளுத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# காகிதத்தில் கப்பல் விட்ட 14 மாத குழந்தை நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தது

மதுரங்குளிய பிரதேசத்தில் நீரோடைஒன்றில்அடித்துச்செல்லப்பட்ட குழந்தை, சக்கரம்ஒன்றில்சிக்கியிருந்த நிலையில், அவரது தாயார் மற்றும் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டு, புத்தளம்போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என மதுரங்குளிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மதுரங்குளி சிங்கள மகா வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் வசிக்கும் ஒரு வயதும் இரண்டு மாதமுமான குழந்தையே காகித ஓடம் ஒன்றை நீரில் விடும்போது நீரால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

இதன்போதே நீரில் காணப்பட்ட சக்கரம் ஒன்றில் சிக்கிய நிலையில், அவரது தாய் மற்றும் அயலவர்களால் குழந்தை மீட்கப்பட்டிருந்தது.

(05)

# வழிப்பறி கொள்ளை குறித்து மானிப்பாய் பொலிஸுக்கு முறைப்பாடு வழங்கியும் எந்த நடவடிக்கையும் இல்லை

## மக்கள் விசனம்



சண்டிலிப்பாய் - சங்கானை வீதியில் வழிப்பறி மற்றும் கொள்ளையில் ஈடுபடும்கும்பல்தொடர்பில்மானிப்பாய் பொலிஸாருக்குமுறைப்பாடுவழங்கியும் கூட, இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையநாள்களில்காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சங்கானைக்கும் சண்டிலிப்பாய்க்கும் இடையிலான பகுதியில் இந்த வழிப்பறி கொள்ளை சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

ஒட்டோவில் கடந்த வெள்ளிக்கிழமை பயணித்த அரிசி ஆலை உரிமையாளரைமறித்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், உரிமையாளரை தாக்கிவிட்டு கழுத்திலிருந்த சங்கிலியை அபகரித்துத் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த நபர் வங்கியில் பணம் வைப்பிலிடுவதற்கு சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மைய நாள்களில் பெண் ஒருவர் உட்பட மேலும் பலரிடம் குறித்த பகுதியில் வழிப்பறி கொள்ளை இடம்பெற்றுள்ளது.

அவை தொடர்பில் முறைப்பாடுகள் வழங்கப்பட்டும், சம்பவத்துடன் தொடர்புடையவர்களின் அடையாளங்களை வழங்கியபோதும் மானிப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# வலிகாமம் வடக்கு காணி விவகாரம்; சட்ட நடவடிக்கை குறித்து ஆராய்வு

## ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரனை சந்தித்தார் மாவை



வலிகாமம் வடக்கில், அரச படைகள் மற்றும் திணைக்களங்களின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் இன்னமும் விடுவிக்கப்படாத நிலைமைகள் நீடிக்கின்ற நிலையில் அவற்றை மீட்பதற்காக சட்ட நடவடிக்கைளை முன்னெடுப்பது தொடர்பில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனதிராசாஈ சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரனுடன் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பில் உள்ள ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரனின் இல்லத்துக்குச் சென்ற மாவை சேனாதிராசா, பொதுமக்களுக்குச் சொந்தமான உறுதிக்காணிகளை அரசாங்கம் பல தடவைகள் விடுப்பதாக அறிவித்தபோதும்இன்னமும்ஒப்படைக்காதநிலைமைகள் நீடிக்கின்றன. ஆகவே, அரசாங்கத்தின் வாக்குறுதிகள் மீது தொடர்ச்சியாக நம்பிக்கைகொள்ள முடியாது என்ற விடயத்தைத் தெரிவித்தவர், அதுதொடர்பில் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்தும் ஆராய்ந்துள்ளார்.

ஏற்கனவே, மாவை சோ.சேனாதிராஜாவுக்கு எதிராகவும், கட்சிக்கு எதிராகவும் போடப்பட்ட பல வழக்குகளில் ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரன் ஆஜராகியிருந்தார். இந்நிலையில், தான் வலி.வடக்கு காணி விவகாரம் தொடர்பிலும் அவர் தலைமையில் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் மாவை சேனாதிராஜா பிரயத்தனம் செலுத்தியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரனுடன்தமிழரசுக்கட்சியின்தற்போதைய செயற்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும், மாவை.சோ.சேனாதிராசா கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாவீரர்களுக்குத் தொண்டாற்ற அனைவரும் முன் வாருங்கள்

## மாவீரர் பணிக்குழுவின் முன்னாள் செயலாளர் அழைப்பு



அரசியலைத் தவிர்த்து மாவீரர்களுக்கு தொண்டாற்ற முன் வாருங்கள் என மாவீரர் பணிக்குழுவின்முன்னாள்செயலாளர்ப.குமாரசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

இந்தக் கார்த்திகை மாதம் எமது மக்களின் நிரந்தர விடியலுக்காக தங்கள் இன்னுயிர்களை ஈந்தவர்களின் புனித மாதமாகும். எனவே தமது உயிர்களை துச்சம் என எண்ணி உயிர் தியாகங்களைச் செய்த எமது மாவீரர்களை நினைவு கூருவதற்கு, எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள ;மற்றும் அரசியல் வேற்றுமைகளைக் கடந்து அனைவரும் முன்வரவேண்டும்.

குறிப்பாக தமது கட்சி அடையாளங்களையும் தனிநபர் விருப்பு வெறுப்புகளையும் அகற்றிவிட்டு தமிழர்களாகஒன்றுகூடவேண்டும்.தமிழர்கள்அரசியல் கருத்துக்களில் வேறுபட்டிருந்தாலும் அவர்களின் ஆழ்மனது மாவீர தெய்வங்களின் கனவுகளோடும் அவற்றைநோக்கியஎண்ணங்களோடும்தொடர்கிறது என்பதனை உலகிற்கு ஒரே குரலில் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

எனவே மாவீரர்களின் கனவுகளை நிறைவேற்றுவதற்கு ஒன்றாக பொறுப்புடன் செயற்படுவோம். உன்னதமானவர்களின் ஆன்மாவின் வழிநடத்தலில் இலட்சியப் பயணத்தைத் தொடர்வோம். - இவ்வாறு ப.குமாரசிங்கம் தெரிவித்துள்ளார். (05)

# அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து நிவாரணம் வழங்க முடியாது

## அமைச்சர் மஹிந்த அமரவீர வீறாப்பு



ஒவ்வொரு குழுக்களின் அச்சுறுத்தல்கள் மற்றும் எதிர்ப்புகளுக்கு ஏற்ப நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க முடியாது என விவசாய மற்றும் பெருந்தோட்டக்கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாங்களும் கடைகளுக்கு சென்று பொருள்களை வாங்குபவர்கள் தான். மக்களைசந்திக்கிறவிதத்தில்மக்களின் கஸ்டம் எங்களுக்கும் தெரியும்.

வங்குரோத்து அடைந்த நாட்டிலே நாங்கள் இருக்கின்றோம். இந்தநிலைதற்போது மாற்றமடைந்துக் கொண்டிருக்கின்றது.

ஆனாலும் மக்களின் வாழ்க்கை செலவு குறித்த விடயத்தில் இன்னும் நல்லவொரு நிலைப்பாட்டிற்கு செல்லமுடியவில்லை.

இம்முறை வரவு செலவுதிட்டத்தின் பின்னர் எதிர்காலத்தில் வலுவான அடித்தளம் ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று நம்புகின்றோம்.

நாங்கள் நிவாரணம் ஒன்றை பெற்றுக்கொடுப்பதாயின்ஒருதுறையைமாத்திரம்அல்லஒட்டுமொத்தநாட்டுமக்களையும் குறித்து சிந்திக்க வேண்டும்.

தொழிற்சங்கங்கள் இல்லாத எத்தனையோ தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். ஆகவே வழங்கும் நிவாரணங்களை பொதுவாக பெற்றுக்கொடுக்கவே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஒவ்வொரு குழுக்களின் அச்சுறுத்தல்கள் மற்றும் எதிர்ப்புகளுக்கு ஏற்ப நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

## கிரிக்கெட் இடைக்கால சபைக்கு

# அர்ஜுனவின் நியமனம் குறித்து ஜனாதிபதிக்கு எதுவும் தெரியாது

## எழுந்தது புதிய பிரச்சினை



இலங்கை கிரிக்கெட் சபையைக் கலைத்து புதிய இடைக்கால குழு நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க எடுத்த இந்த தீர்மானம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்குத் தெரியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தகைய குழுவொன்று நியமிக்கப்படுவைத்து குறித்தும் புதிய இடைக்கால குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் தொடர்பிலும் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட் சபைக்கு இவ்வாறானதொரு இடைக்கால குழு நியமிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்திகள் ஊடாகவே ஜனாதிபதிக்கு தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அமைச்சர் ரொஷான் ரணசிங்கவை தொடர்பு கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பலதடவைகள் முயற்சித்தும் இதுவரை அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கிரிக்கெட் சபையை இடைநிறுத்தி உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியின் முன்னாள்தலைவர்அர்ஜுனரணதுங்கதலைமையில் ஏழு பேர் கொண்ட குழுவை விளையாட்டுத்துறை அமைச்சர்ரொஷான்ரணசிங்கநேற்று(திங்கட்கிழமை) நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# உலக சாதனை படைத்த பலாங்கொடை சிறுவன்



2 வயதும் 11 மாதங்களுமான ஆரோன் சாத்விக் என்ற சிறுவன் 100 மீற்றர் தூரத்தை 30 நொடிகளில் ஓடி முடித்து சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

பலாங்கொடையில் வசித்து வரும் ராஜீவ்காந்தி மற்றும் ரொஷானி தம்பதிகளின் மகனே பலாங்கொடை பெரிய மைதானத்தில் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஶ்ரீ நாகவாணி ராஜா, இரத்தினபுரி மாவட்டத் தலைவர் பிரவீனா பாரதி மற்றும் நுவரெலியா மாவட்டத் தலைவர் சாம்பசிவம் சதீஷ்குமார் ஆகியோரின் முன்னிலையில் குறித்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. (05)

# ஜனாதிபதி ரணிலுடன் மொட்டுக்கு முரண்பாடு?

## இராதாகிருஷ்ணன் சந்தேகம்



மொட்டுக்கட்சியும்ஜனாதிபதியுடன் மோதலில் உள்ளதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன என நாடாளுமன்றஉறுப்பினர்வே.இராதாகிருஸ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

ஹற்றனில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'மக்களின்ஆதரவுஇல்லாமல்வந்த ஒருஜனாதிபதியால்இவ்வளவுசெய்ய முடியும்என்றால் மக்களின் ஆதரவோடுஜனாதிபதி ஒருவர் வந்தால் எவ்வளவோ செய்யலாம்.


இலஞ்சம் வழங்கிமாகாண சபை தேர்தலை பிற்போட்டார்கள் இந்த தேர்தலையும் இலஞ்சம் வழங்கிபிற்போட முயற்சிக்கின்றார்கள். ஆகவே மக்கள் இது குறித்து அவதானத்துடன் இருக்க வேண்டும்.

அடுத்த அரசாங் கத்தை தெரிவு செய்வ தற்கான நடவடிக்கையை மக்கள் முன்னெடுக்க வேண்டும்.

தற்போது மொட்டு கட்சியும் ஜனாதிபதியுடன் மோதலில் உள்ளதாக எங்களுக்கு தகவல்கள் கிடைத்திருக்கின்றது.

ஆகவே இது எதிர்காலத்தில் எவ்வாறு முடிவடையும் என்று கூற முடியாது. - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# மக்கள் காங்கிரஸிலிருந்து அலிசப்ரி ரஹீம் நீக்கம்



அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் நீக்கப்பட்டுள்ளார் எனக்கட்சியின்தவிசாளர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் மீது கட்சியின் ஒழுக்காற்றுக் குழு நடத்திய தொடர்ச்சியான விசாரணையின் பின்னரே, கட்சியின் உறுப்புரிமையிலிருந்து அவரை நீக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிணங்க, இவரது பதவி விலக்கல் குறித்த கடிதம் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லாவுக்கும், அலிசப்ரி ரஹீமுக்கும் தனித்தனியாகஅனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடிதத்தைப்பொறுப்பேற்றுள்ளமுஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லா, இது குறித்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்துள்ளார் எனவும்அகில இலங்கைமக்கள்காங்கிரஸ் தவிசாளர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி மேலும் தெரிவித்துள்ளார். (05)

# தனியார் விடுதியில் ஆணின் சடலம்!

## யாழ்ப்பாணத்தில் நேற்று மீட்பு

யாழிலுள்ள தனியார் விடுதியொன்றில் இருந்து ஆணொருவரின் சடலமொன்று நேற்று (திங்கட்கிழமை) மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்த லால் பெரேரா (வயது 61) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனவும், அவர் கடந்த 3 நாள்களாக அங்கு தங்கியிருந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் அவரது சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்,போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.11.2023இல் வெளியிடப்பெற்றது.